1971 ஜூலை 10]

தலைமன்னார்-ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து

* 188 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தலைமன்னாருக்கும் ராமேஸ்வரத்திற்கும் இடையே வாரம் எத்தனை முறை கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ராமேசுவரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே வாரம் இரண்டு முறை கப்பல் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தக் கப்பல் போக்குவரத்து கட்டுப்படியாகவில்லை என்பதால் நிறுத்தப்போவதாகச் சொல்லப்படுகிறதே உண்மையா? கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பெயரை அந்தக் கப்பல்கள் ஒன்றுக்காவது வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தக் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்படுவதாக எண்ணம் இல்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே செல்கின்ற பயணிகள் கப்பலாகும் இது. இடையிலே நான்கு வாரங்கள் செல்லவில்லை. அதற்குக் காரணம் நாமல்ல, இலங்கையும் அல்ல. இலங்கையிலே கலவரம் இருந்ததால் இப்போக்குவரத்து நடைபெறவில்லை. இப்போது வாரத்திற்கு இரண்டு முறைகள்தான் போய்க்கொண்டிருக்கிறது. இந்தக் கப்பல்களுக்கு நாம் பெயர் வைப்பதில்லை. தூத்துக்குடியிலுள்ள வீர பாண்டியன், வீரசோழன் என்று சிறிய சிறிய கப்பல்களுக்கு நாம்தான் பெயர் வைத்திருக்கிறோம்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவர் அவர்களே, இராமேசுவரத்திலிருந்து தூத்துக்குடிக்குச் செல்வதற்கு ஸ்டீமர்கள் செல்வதற்குப் போதுமான அளவுக்கு ஆழமாக செய்யும் வேலை தூத்துக்குடியிலே முடிந்து விட்டதால், அதை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தூத்துக்குடியிலிருந்து இராமேசுவரத்திற்கு உடனடியாக கப்பல் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு வழியில்லை. தூத்துக்குடியிலே ஒரு பாலம் (Jetty) கட்டப்பட்டு முடிகின்ற தருவாயில் இருக்கிறது. அதன்மூலம் வெளி நாடுகளுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்ய எண்ணம் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், கடந்த காலங்களில் தனுஷ் கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே போக்குவரத்து இருந்து இப்பொழுது அது நிறுத்தப்பட்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே போக்குவரத்து இருக்கிறது. இராமேஸ்வரத்தில் இறங்கும் பயணிகளுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்குத் தக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இராமேஸ்வரத்தில் பயணிகள் இறங்குவதற்கு வசதிகள் பெருக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, தற்போது இலங்கையிலிருந்து நிறைய அகதிகள் நம்முடைய தமிழ்நாட்டை நோக்கி வருவதால் வாரம் இரண்டு முறைகள் விடும் கப்பலை இன்னும் 2 நாள் கூட்டி விட அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, தற்போது இரண்டு முறை ஓடிக்கொண்டிருப்பதே போதுமானதாக இருக்கின்றது. தலைமன்னாரிலிருந்து செவ்வாய், வியாழன் இரண்டு நாட்களில் புறப்பட்டு வருகின்றன. பிரயாணிகளுக்கு இடமில்லாமல் போனதாக, அரசுக்குத் தகவல் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கும் எல்லாத் துறைமுகங்களையும், மைனர் போர்ட்ஸ், மேஜர் போர்ட்ஸ் எல்லாவற்றையும் தொட்டுச் செல்லும் முறையில் கப்பல் போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, நமது சேதுக்கால்வாய்த் திட்டம் முடிந்த பிறகு அப்படிச் செய்ய முடியும். தற்சமயம் அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால் தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றால் இலங்கையைச் சுற்றிக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. எனவே, அதற்குத் தகுந்த வசதியில்லை.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, இராமேஸ்வரத்திலிருந்து வரும் கப்பல் கடலிலேயே ஏறத்தாழ இரண்டு மைல்களுக்கு அப்பால் நிற்கிறது. கடற்கரை ஓரமாக வருவதற்கு ஏதாகிலும் வசதி ஏற்படுமாறு அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, அதற்கான ஏற்பாடுகள் ஆய்வில் இருக்கின்றன.

வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள்

* 189. வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, will the Hon. Minister think of starting at least one Agricultural University in Thanjavur district?